பக்கங்கள் 19+7

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 29 புதன்கிழமை 14.08.2024 | அதிர்வு 13

## வேட்புமனுவில் இன்று ரணில் கையொப்பம்!



வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று கையொப்பமிட்டார். 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சகல வேட்பாளர்களுடனும் தீர்வு குறித்துப் பேசுங்கள்!

## சுமந்திரனுக்கு இந்தியத் தூதுவர் ஆலோசனை

“இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு ஒன்றுக்கு தென்னிலங்கைத் தரப்புகளைச் சம்மதிக்கச் செய்வதற்கான முயற்சியாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் அனைவருடனும் திறந்த மனதுடன் பேச்சுக்களை நடத்துங்கள்!” - என்று இன்று காலை தம்மைக் கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் ஆலோசனை கூறியிருக்கின்றார் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா. 04

# சாய்ந்தமருது பிரதான வீதியில் கோர விபத்து! கனரக வாகனம் மோதி விவசாயி உயிரிழப்பு!!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த விவசாயி ஒருவர் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்துக்கு முன்பாக கனரக வாகனம் மோதிப் பலியாகியுள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் இன்று புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை, கைகாட்டி, கல்லரிச்சல் பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மட் றமீஸ் என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். 04



# செஞ்சோலை படுகொலையின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு – வள்ளிபுனம், இடைக்கட்டு பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் மாணவர்கள் மீது இலங்கை விமானப் படை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பாடசாலை மாணவர்கள் 53 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேரினதும் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வான் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் இன்று புதன் கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாகச் சுடரேற்றி, அக வணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரை ராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் குகன், இளைஞர்கள், பொதுமக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.













# சஜித்துடன் டில்ஷானும் சங்கமம்!



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் திறமையான சகலதுறை ஆட்டக்காரரான திலகரத்ன டில்ஷான் இன்று ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டார் என்று அக்கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏறக்குறைய 17 வருடங்கள் இலங்கை கிரிக்கெட் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய திலகரத்ன டில்ஷான், சிறிது காலம் அதன் தலைவராகவும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# யாழ். சேந்தாங்குளத்தில் மோதல்! வாடிகள், படகுகளுக்குத் தீ வைப்பு!!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – சேந்தாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் 3 படகுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

சேந்தாங்குளம் கடற்கரையில் நேற்று இரவு 9 மணியளவில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதை அடுத்து, கடற்கரையில் இருந்த மீன் வாடிகள் மற்றும் படகுகளுக்குத் தீ வைக்கப்பட்டது.

அதில் சில வாடிகள் எரிந்த நிலையில், மூன்று படகுகள் தீக்கிரையாகின.

படகுகள் மற்றும் வாடிகளுக்கு தீ வைக்கப்பட்டதையடுத்து ஊரவர்கள் ஒன்று கூடி, தீயை அணைத்ததுடன் சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸாருக்கு அறிவித்தனர்

மோதலில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!

மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

மாத்தறை, திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாத்தறை – கதிர்காமம் வீதியில் மாலியத்த பிரதேசத்தில் நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள் ளது என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர்.


திக்வெல்லவிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் சென்றுகொண்டிருந்த மாடு ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் படுகாயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலி ஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

கொட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய நபரே உயிரிழந் துள்ளார்.

சடலம் மாத்தறை வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை திக்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கட்டுப்பணம் இன்று செலுத்தினார் நாமல்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்காக கட்டுப்பணம் செலுத் தப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ சார்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இன்று காலை தேர்தல்கள் ஆணைக்குழு வில் கட்டுப்பணத்தைச் செலுத்தி யுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர் தலில் போட்டியிட 40 பேர் கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இதேவேளை, இன்று நண்பகல் 12 மணியுடன் கட்டுப்பணம் செலுத்தும் கால அவகாசம் நிறைவடைந்துள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சாய்ந்தமருது...**

தனது வயலில் சிறுபோக வேளாண்மை அறுவடை இடம்பெறுவதால் நெல்லை உலர்த்துவதற்காகப் படங்குகளைப் பெறுவதற்காக மோட்டார் சைக்கிளில் கல்முனைக்கு அவர் செல்லும் வழி யிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று சாய்ந்தமருது பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசா ரணைகளைச் சாய்ந்தமருது பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**வேட்புமனுவில்...**

இது தொடர்பான நிகழ்வு கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள அவரது அரசியல் அலுவலகத்தில் நடைபெற்றது.

**சகல வேட்பாளர்களுடனும்...**

"இனவாதம் தலை எடுக்காத இந்தத் தேர்தல் சமயம்தான் எல்லாத் தரப்பி னுடனும் திறந்த மனதுடன் பேசுவதற்கு மிகப் பொருத்தமான காலம். எல்லா வேட்பாளர்களுடனும் நிபந்தனை ஏது மின்றிப் பேசுங்கள். அவர்களை இணங்க வைக்க முயலுங்கள். அப்படிப் பேசுபவர் களில் யார் தீர்வுக்குப் பொருத்தமான வர்கள் என்பதை நீங்கள் அடையாளம் கண்டு, அவர்களை ஆதரிக்கும்படி உங் கள் மக்களை நீங்கள் வழிபடுத்தலாம், அது இறுதி நேரத்தில் செய்ய வேண்டி யது. இப்போது நீங்கள் எல்லோருடனும் மனம் விட்டுப் பேசுங்கள். பொதுவாக இணங்கக் கூடிய விடயங்களை அடை யாளம் காணுங்கள்.

"தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஒவ்வொரு வேட்பாளரினதும் கருத்து நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத் தச் செய்யும் விதத்தில் அவர்களுட னான உங்களுடைய உரையாடல் அமைய வேண்டும். அப்படி அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்து வார்களாயின் தேர்தலின் பின்னர்தன்னும் தென்னிலங்கை, தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஒற்றுமைப்பட்ட நிலைப் பாட்டை எடுக்க அது உதவும்" – என்று இந்தியத் தூதுவர் சுமந்திரனிடம் கூறி னார்.

"ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினிடமும் நான் இதைத்தான் கூறியுள்ளேன். எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை விரும்பினால் நீங்கள் இறுதிக் கட்டத்தில் எடுக்கலாம். அதற்கு முன்னதாக இப்போது எல்லாத் தரப்பினருடனும் திறந்த மனதுடன் பேசுங்கள்!" – என்றார் இந்தியத் தூது வர்.

மாகாண சபைத் தேர்தல்கள், அரச மைப்பின் 13 ஆவது திருத்த நடை முறையாக்கம் ஆகியவை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண் டுள்ள நிலைப்பாடு, அவை தொடர் பில் தாம் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பட்டியலிட்டுள்ள விடயங்கள குறித்து சுமந்திரன் மூலமான தகவல்களை இந்தியத் தூதுவர் இன்று விளக்கமாகக் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது.

இதன் பின்னர் சுமந்திரன் எம்.பி., ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிப- தி ரணில் விக்கிரமசிங்கவைச் சுமார் 45 நிமிட நேரம் சந்தித்து உரையாடி னார்.



# மஹிந்த, பஸில், கோட்டா முன்னிலையில் வேட்புமனுவில் கையெழுத்திட்டார் நாமல்

வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வேட்பு மனுப் பத்திரத்தில் இன்று கையெழுத்திட்டார்.

கொழும்பு, விஜேராம மாவத்தையிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்ட அக்கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் மதத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொடரும் நெடுந்துயர்

முல்லைத்தீவு, வள்ளிபுனம், இடைக்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு தலைமைத்துவ பயிற்சிக்காக சென்றிருந்த மாணவர்கள் மீது சிறிலங்கா விமானப்படை நடத்திய கொடூரமான குண்டு வீச்சுத் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 53 பேர் உட்பட 61 பேர் உயிரிழந்தனர். 130 மாணவிகள் படுகாயமடைந்தனர். பல மாணவிகள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். படுகாயமடைந்தவர்களில் மூன்று மாணவியர்களுக்கு கால்கள் துண்டக்கப்பட்டன. மாணவி ஒருவர் கண் ஒன்றை இழந்தார்.

இவ்வாறு கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டவர்களது 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வான் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் அதே நேரத்தில் இன்றையதினம் காலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றது.

இக்கொடூரத்தின் போது 16 முதல் 18 வயதுடைய பாடசாலை மாணவிகளே கொல்லப்பட்டனர். முதலுதவிப் பயிற்சிகள் மற்றும் தலைமைத்துவ பயிற்சிக்காக சென்றிருந்த மாணவர்கள் முதலுதவிப் பரீட்சையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர்களை விமானக் குண்டு வீசிக் கொன்றொழித்த சிங்கள அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேசத்துக்கும் கதை விட்டது.

தமிழர்களின் பாடசாலைகள் மீதும் பள்ளி மாணவர்கள் மீதும் போரைத் தொடுத்து, குண்டுகளைக் கொட்டிய பௌத்த - சிங்க இனவெறி அரசின் கொடூர வஞ்சினத்தின் இருண்ட பக்கங்களில் தமிழ்ப் பெண் குழந்தைகளின் குருதியாலும் உயிர்களாலும் எழுதப்பட்டதுதான் செஞ்சோலை வடு.


இன்று பலஸ்தீனத்தில் - காஸாவில் - பாடசாலைச் சிறுவர், சிறுமியர்களையும் கண்மூடித்தனமாகக் கொன்றொழித்து காட்டுமிராண்டித்தனம் புரியும் இஸ்ரேலினுடைய கிபிர் குண்டு வீச்சு விமானங்களே அன்று செஞ்சோலைச் சிறார்கள் மீது குண்டு வீசிப் பேரனர்த்தம் விளைவிக்க ஸ்ரீலங்கா விமானப்படையினரால் பயன்படுத்தப்பட்டது என்பதும் மறக்கற்பாலதல்ல.

செஞ்சோலை தாக்குதல் என்பது தற்செயலாக இலக்குத் தவறி நடந்த ஒன்றல்ல. அப்போது பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளராக இருந்த கெஹலிய றம்புக்வெலவின் கூற்றுப்படி நான்கு வருடங்களாக கண்காணித்து, இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் அது. மனிதாபிமானம் கடந்த கொடூரம் அது. ஈழத் தமிழர்களின் இளம் சந்ததி மீதான இனவழிப்பு இலக்குத் தாக்குதல் அது என்பது வெளிப்படையானது.

செஞ்சோலைப் படுகொலை நடைபெற்று பதினெட்டு வருடங்கள் கடந்துவிட்டன.

வருடந்தோறும் அந்தச் சம்பவம் தமிழ் மக்களால் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் துடிக்கும் இதயங்களுடன் நினைவுகூரப்பட்டு வருகின்றது. இந்தப் படுகொலைச் சம்பவம் உலக அளவில் பெரும் கண்டனத்துக்கு உள்ளாகியிருந்த போதிலும், அந்த அநியாயத்திற்கு இதுவரையில் நியாயம் கிடைக்கவில்லை. நீதி கிட்டவில்லை.அந்தக் கொலைகளுக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட வில்லை.

இதனால் செஞ்சோலைப் படுகொலைகள் காலம் காலமாக தமிழ் மக்களின் மனங்களில் அழியாத சோகச் சுவடாகவே பதிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# மன்னார் பாலம் - தள்ளாடி சந்திவரை நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கத் தடை!





( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பாலத்தில் இருந்து தள்ளாடி சந்திவரை இருமருங்கிலும் நிரந்தர கட்டடம் அமைக்க தடைசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மறை மாவட்ட குடும்பநல மற்றும் பொது நிலையினர் ஆணைக் குழுவால் முன்வைக்கப்பட்ட முறையீட்டைத் தொடர்ந்தே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் தீவின் நுழைவாயிலான பாலத்தில் இருந்து தள்ளாடி சந்தி வரை ஏ- 14 வீதிக்கு இருமருங்கிலுமுள்ள பிரதேசத்தை பாதுகாத்தல் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட குடும்பநல மற்றும் பொது நிலையினர் ஆணைக்குழு மன்னார் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அந்தக் கடிதத்துக்கு இணங்க கடந்த முதலாம் திகதி மன்னார் அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மன்னார் பாலத்தில் இருந்து தள்ளாடி சந்திவரை ஏ - 14 வீதிக்கு இருமருங்கிலுமுள்ள பிரதேசத்தில் தற்போது கட்டப்படும் நிரந்தரக் கட்டட நிர்மானத்தை இப்பிரதேசத்தின் முக்கியத்துவங்களை கருத்தில் கொண்டு வேறு இடத்துக்கு மாற்றுதல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக இதன் தொடர்ச்சியான இரண்டாவது கூட்டம் கடந்த வியாழக்கிழமை (07) அரச அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள், மன்னார் மேலதிக அரச அதிபர் (காணி) , பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த வனவள இலாகா அதிகாரிகளும் இந்தக் கட்டுமானப் பணிகளுக்கு அனுசரணை வழங்கி வரும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளும் கட்டுமானப் பணிகளுக்கு சாதகமான கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

ஆனால் மன்னார் மக்கள் சார்பாக இதில் கலந்து கொண்ட மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், மன்னார் மறை மாவட்டப் பொது நிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார், மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார் மற்றும் வாழ்வோதய இயக்குநர் அருட்பணி க.அன்ரலிற்றோ அருள்ராஜ் குரூஸ் அடிகளார் ஆகியோர் இந்தக் கட்டுமானப் பணியால் மன்னார் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்திருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் தற்பொழுது கட்டுமானப் பணிகளை உடன் நிறுத்த வேண்டும் என்றும் இந்த இடத்தில் நிரந்தரக் கட்டடங்கள் அமையும் இடம் இல்லை எனவும் இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட வேண்டி இருப்பதாக தெரிவித்த நிலையில் கூட்டம் நிறைவு பெற்றது.

# மன்னாரில் பாணின் விலை கட்டுப்பாட்டுக்குள் வந்தது!

## அரச அதிபரின் நடவடிக்கை

( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் பாணின் விலை குறைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள வெதும்பக உரிமையாளர்களுடன் திங்கள் கிழமை (12) மன்னார் மாவட்ட செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து பாணின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரச அதிபர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

ஏழைகளின் உணவு என அழைக்கப்படும் பாணின் விலை மன்னார் மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களை விட அதிகமாக காணப்படுகின்றது.

ஏனைய மாவட்டங்களில் பாணின் விலை 130 ரூபா தொடக்கம் 140 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஆனால் மன்னாரில் பாணின் விலை அதிகமான விலைக்கு 160 ரூபா தொடக்கம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இது இங்குள்ள மக்களுக்கு மிகவும் அசௌகரியமான நிலையை ஏற்படுத்தியுள்ளதை பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் எனது கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதனை அடுத்து மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து வெதுப்ப உரிமையாளர்களையும் அழைத்துக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் சாதாரண பாண் 140 ரூபாவுக்கு விற்பனை செய்ய ஏகமனதாக அனைத்து வெதுப்ப உரிமையாளர்களும் ஏற்றுக் கொண்டனர்.

இதுவரை காலமும் மன்னார் மாவட்டத்தில் வெதுப்பகச் சங்கம் அற்ற நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் இதற்கான சங்கம் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன் இதற்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றுள்ளது.



இதனால் எதிர்காலத்தில் மன்னாரில் வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்தத் தீர்மானதுக்கு அமைவாகப் பாண் விற்பனை செய்யப்படுகின்றதா என்பது கண்காணிக்கப்படும்.

இவ்வாறு விற்பனை செய்யப்படாவிடில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு 023 222 2235 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முறையீடு செய்ய முடியும். நேரடியாகவும் முறையீடு செய்ய முடியும். -என்றார்.

# “திரைக்கு வராத சங்கதி” நூல் வெளியீடு!







எழுத்தாளரும், ஊடகவியலாளருமான சூரன்.ஏ.ரவிவர்மாவின் “திரைக்கு வராத சங்கதி” எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் .இ. பாரதியின் தலைமையில் மங்கல விளக்கு ஏற்றலுடன் ஆரம்பமானது.

இதில் வரவேற்பு உரையைப் பிரான்ஸ் ரிஎன்ரிஆர் சர்வதேச ஊடகவியலாளர் திருமதி ரவிச்சந்திரன் ரவிசக்தி, நிகழ்த்தினார். அறிமுக உரையை “ஒருவன்” செய்தித் தள முகாமையாளர் அ.நிக்ஸன் நிகழ்த்தினார்.

வெளியீட்டு உரையை ஜீவநதி, கடல் ஆகிய சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன் நிகழ்த்தியதை தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறை தலைவர் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் நிகழ்த்தவுள்ளார்.

முதல் பிரதியை புத்தக ஏழுத்தாளர் அவர்களது சகோதரிகள் பெற்றுக் கொள்ள மூத்த ஊடகவியலாளர்களான அ.நிக்சன், இ.பாரதி, ஊடக கற்கைகள் தலைவி திருமதி பூங்குழலி ஆகியோர் இணைந்து வழங்கிவைத்தனர்.





# சந்நிதியான் ஆச்சிரம திருவிழாகால விசேட ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் பெருந் திருவிழா கால ஆன்மீக சொற்பொழிவில் 6 ஆம் நாள் “திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்” தலைப்பில் அருளுரையைச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினரும், ஆசிரியருமான சத்தியநாதன் வாகீசன் நிகழ்த்தினார்.





சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் சிவநாதன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தான் சுதந்திர தின நிகழ்வு

பாகிஸ்தான் தூதரகத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் (12) இடம் பெற்றன.

இதில் இலங்கைக்கான பாகிஸ்தானின் பிரதி உயர்தனிகர் வஜீட் ஹசன் ஹஸ்மியை சர்வமத தலைவர்கள் சந்தித்து சுதந்திர வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.







# மாணவர்களின் சந்தை நிகழ்வு



(எம். எப். றிபாஸ்)

நிந்தவூர் அல்-மினா பாலர் பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சமூக செயற்பாட்டாளரும், ஹிக்மா விளையாட்டு கழகத்தின் தலைவருமான ஐ.எல்.எம். ஜாபிர், இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட விரிவாக்கள் உத்தியோகத்தர் ஹாரூன் அம்ஜத் அலி, மாணவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களால்சிறியகடைத்தொகுதி அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிரதம அதிதியால் மாணவர்களுக்குப் பரிசுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குத் தேசிய விருது கிடைத்தது!



(பழுவூரான்)

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் சுகவனிதையர் சிகிச்சை சேவைகள் தொடர்பான தேசிய ரீதியிலான செயற்றிறன் மதிப்பீட்டில் அதி உயர் தரக்கணிப்பில் புத்தாக்கம், படைப்பாற்றல் மற்றும் தொடர் கண்காணிப்பு ஆகிய பிரிவுகளில் சிறப்பான சேவையை வாழைச்சேனை பிரதேச பெண்களுக்கு வழங்கியமைக்காக தேசிய ரீதியில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் முதலிடம் பெற்றமைக்கு தேசிய விருது வழங்கப்பட்டது.

சுகவனிதையர் சிகிச்சை சேவைகள் தொடர்பான தேசிய ரீதியிலான செயற்றிறன் மதிப்பீட்டில் தேசிய ரீதியில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் மத்தியில் அதி உயர் தரக்கணிப்பின் மூலம் புத்தாக்கம், படைப்பாற்றல் மற்றும் தொடர் கண்காணிப்பு ஆகிய பிரிவுகளில் மிகச் சிறப்பான சேவையை அனைத்து தேசிய ரீதியான சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களை விட சிறப்பாக வழங்கியமைக்காக வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு மருத்துவ பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி பாலித மஹிபால, அமைச்சின் பிரதிநிதி சுசில் பெரேரா, ஐக்கிய நாடுகள் பிரதிநிதி, மற்றும் குடும்ப சுகாதார பணியகத்தின் தலைவர் சித்ரமாலி டீ சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விலக்கை அடைய குடும்ப சுகாதார பணியகம் , பிராந்திய சுகாதார பணிப்பாளர் மற்றும் பிராந்திய தாய் சேய் சுக நல பிரிவினரின் வழிகாட்டல் உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இந்தச் சேவையில் படிப்படியாக கடந்த ஐந்து வருட காலம் முன்னேற்றமடைந்தே இந்த இலக்கை எட்டி தேசிய ரீதியில் முதல் இடத்தை பிடித்துள்ளது.

இதற்காக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தேவராஜமுதலி ஸ்டீவ் சஞ்ஜீவ் தலைமையில் அவரது வழிகாட்டலில் தாதிய உத்தியோகத்தர், மேற்பார்வை மருத்துவ மாது , பொது சுகாதார மாதுகள் ஆகியோரின் வினைத்திறனான அயரான சேவையாலும், வாழைச்சேனை அன்னையர் குழுக்களின் பூரண ஒத்துழைப்பாலும் இவ்விருது கிடைக்கப் பெற்றுள்ளது.

அத்துடன் தொடர்ந்தும் மக்களுக்கு உயர்தர சேவைகள் வழங்கப்படும் என்றும் சேவையை மக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்றும் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தேவராஜமுதலி ஸ்டீவ் சஞ்ஜீவ் தெரிவித்துள்ளார்.



# பஸ் தரிப்பிடப் பகுதியில் குப்பை கொட்டுவதால் சிரமம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் பிரதான வீதியிலுள்ள பஸ் பயணிகள் தரிக்கும் இடத்துக்கு அருகில் கொட்டப்பட்டுள்ள திண்மக் கழிவுகளால் பிரயாணிகளுக்கு பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

நிந்தவூர்– காரைதீவு பிரதான வீதியில் அமையப்பெற்றுள்ள பஸ் பயணிகள் தரிக்கும் இடத்துக்குச் சூழ உள்ள பகுதிகளில் குப்பைகள் கொட்டப்பட்டு துர்நாற்றம் வீசுவதாக பிரயாணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பல மாதங்களாக அகற்றப்படாத இந்தத் திண்மக் கழிவுகளைக் காகம், ஆடு, மாடு போன்றவை கிளறுவதால் துர்நாற்றம் மேலும் அதிகரிக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# தரம் 5 புலமைப் பரிசில் தொடர்பில் அதிபர்களுக்குக்கான செயலமர்வு

(கே. எ. ஹமீட்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஏ, பி, சி பரீட்சை பெறுபேற்று மீளாய்வுக் கூட்டம் இன்று (14) அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.



அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா தலைமையில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்சேய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), அட்டாளைச்சேனை , பொத்துவில் , அக்கரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாண ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர், பாடசாலையின் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது மாகாண மட்டத்தில் நடைபெற்ற பரீட்சைகளான ஏ, பி, சி ஆகியவற்றில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் மற்றும் 70 இற்குக் குறைவான புள்ளிகள் பெற்ற மாணவர்கள் விவரம், குறைவான புள்ளிகள் பெறும் மாணவர்களுக்குத் தங்களால் மேற்கொள்ளப்படும் மேலதிக விஷேட வேலைத் திட்டங்கள், தங்கள் மாணவர்கள் பாடங்களில் இடர்களைச் சந்திக்கும் பகுதிகளைத் தெளிவாக அடையாளம் கண்டு வைத்திருக்க விடயங்கள் போன்றன தொடர்பில் ஆரராயப்பட்டது.

இதன்போது மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டன.





# பாடசாலை அதிபரை மாற்றுமாறு கோரி பெற்றோர்கள் இன்று காலை ஆர்ப்பாட்டம்

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நோர்வூட் சென். ஜோன் டிலரி தமிழ் வித்தியாலய அதிபரை வெளியேற்றி முறையான அதிபரை நியமிக்குமாறு வலியுறுத்திப் பெற்றோர்கள் இன்று (14) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் உடனடி விசாரணை நடத்தி அறிக்கை சமர்பிக்குமாறு மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளருக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நோர்வூட் சென். ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்தில் இருந்து ஊழல் கொண்ட அதிபரை வெளியேற்றி முறையான ஊழல் அற்ற ஒரு அதிபரை நியமிக்குமாறு பெற்றோர் வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் இன்று (14) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் 9.30மணிவரை இடம்பெற்றது.




இந்த ஆர்ப்பாட்டத்தின் போது சுமார் 300 இற்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஹட்டன் வலயகல்வி பணிமனையின் பணிப்பாளர் ஆர். விஜேந்திரனை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அது பயனிக்கவில்லை இந்த சம்பவம் தொடர்பாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது, நோர்வூட் சென். ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் விவகாரம் தொடர்பாக தொலைபேசி மூலம் தமக்கு பெற்றோர்கள் முறைப்பாடு ஒன்றை முன்வைத்துள்ளனர். பாடசாலையின் மாணவர்களின் எதிர்காலம் குறித்து உடனடியாக விசாரணை ஒன்றை ஆரம்பித்து கல்வி அமைச்சிக்கு அறிக்கை ஒன்றை சமர்பிக்குமாறு மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.





# வலைப்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி திரேசா வெற்றி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய 16 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்ளுக்கு இடையிலான அமரர் இ.விக்கினேஸ்வரமூர்த்தி ஞாபகர்த்த வலைப்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி சம்பியனானது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயம் மற்றும் புனித திரேசா பெண்கள் கல்லூரி என்பன மோதிக்கொண்டன.

22:18 என்ற புள்ளிக் கணக்கில் புனித திரேசா பெண்கள் கல்லூரி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தை வீழ்த்தி முதல் இடத்தைப்பெற்று சம்பியனானது. மூன்றாவது இடத்தை முட்கொம்பன் மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் உப தலைவர் சந்தனம் பெர்ணான்டோ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளீதரன் பிரதம அதிதியாகவும், மாவட்ட விளையாட்டு உத்தியோஸ்ரதஸ்தர் எம்.மோகனதாஸ், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.சத்தியமூர்த்தி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கரைச்சி மற்றும் பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.









# வீரமுனைப் படுகொலையின் 34 ஆவது நினைவேந்தல்!

( வி.ரி.சகாதேவராஜா)

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வீரமுனைப் படுகொலையின் 34 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலய முன்றலில் மிகவும் உணர்வு பூர்வமாக நேற்று முன்தினம் (12) திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

வீரமுனை கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தா பூ. பரமதயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோ. புஸ்பராஜா, காரைதீவு முன்னாள் பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறில் உள்ளிட்ட ஆலய உறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மிலேச்சத்தனமான படுகொலை 1990 ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வீரமுனை ஆலயத்தினுள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







# இளைஞர் மன்ற உறுப்பினர்களை வலுப்படுத்தும் செயலமர்வு இன்று

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச செயலர் பிரிவில் இளைஞர் மன்ற உறுப்பினர்களை வலுப்படுத்தும் வன்முறை மற்றும் தீவிரவாத சிந்தனைப் போக்கு என்பவற்றில் இருந்து தவிர்ந்து கொள்ளல் தொடர்பான செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

காரைதீவு பிரதேச செயலர் திருமதி. ராகுலநாயகி சஜிந்திரன் வழிகாட்டலில் கெப்ஸோ தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் காரைதீவு பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதேச இளைஞர் மன்ற உறுப்பினர்களை வலுப்படுத்தல் எனும் தொனிப்பொருளுக்கு அமைவாக இளைஞர்கள் மத்தியில் வன்முலை இருந்து தடுத்தல் எனும் கருப்பொருளிலான செயற்றிட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சி “அடிப்படை சட்டம் மற்றும் மனித உரிமைகள்” எனும் தலைப்பிலான விரிவுரை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.ஸி.ஏ.அஸீஸால் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று (14) இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் காரைதீவு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கெப்ஸோ அமைப்பின் மாவட்ட செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## இந்திய சுதந்திர தினம் நாளை:

# பாதுகாப்பு

## ஏற்பாடுகள் டில்லியில் உச்சம்

இந்தியாவின் 78ஆவது சுதந்திர தின விழா நாடு முழுவதும் நாளை (வியாழக்கிழமை) கோலாகலமாக கொண்டாடபப்ட உள்ளது.

இதில் இந்திய அரசு சார்பில் டில்லி செங்கோட்டையில் நடைபெறும் விழா பிரதான விழா ஆகும். இந்த விழாவை யொட்டி பிரதமர் மோடி நாளை காலை 7.30 மணிக்கு தேசியக்கொடி ஏற்றி சுதந்திர தின உரை நிகழ்த்துவார். இது அவரது 11ஆவது சுதந்திர தின உரை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டுக்கான சுதந்திர தின விழா, 'விக்சித் பாரத்" என்ற சிந்தனை யோடு கொண்டாடப்படவுள்ளது. விழாக் கொண்டாட்ட ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

இதற்கிடையே சுதந்திர தின விழா முழு ஒத்திகை நிகழ்ச்சி டில்லி செங் கோட்டையில் நேற்று நடைபெற்றது. நாளை சுதந்திரதின விழா எப்படி நடைபெறுமோ அதைப்போல நேற்று விழா நடத்திப் பார்க்கப்பட்டது. இதில் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த முப்படையினரும் பங்கேற்றனர். மேலும் துணை இராணுவப்படையினர் மற்றும் என்.சி.சி. உள்ளிட்ட மாணவர் படையும் பங்கேற்றது.

நிகழ்ச்சியையொட்டி தேசியக்கொடி ஏற்றி வணக்கம் தெரிவித்தனர். அப் போது இராணுவ ஹெலிகாப்டர் மேலே பறந்து பூக்கள் தூவப்பட்டன. இந்த ஒத்திகை நிகழ்ச்சியின் ஒரு கட்டமாக பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகள் தொடர்பான ஒத்திகையும் நடத்தப்பட்டது.

ஒத்திகை நிகழ்ச்சிகள் காரணமாக செங்கோட்டையைச் சுற்றி போக்குவரத்து மாற்றி அமைக்கப்பட்டிருந்தது. டில்லி ஒத்திகை போல நாடு முழுவதும் முக்கிய அமைப்புகளில் சுதந்திர தின விழா ஒத்திகை நடத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

சுதந்திர தின விழாவை முன்னிட்டு டில்லியில் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே பாதுகாப்பு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டி ருப்பதால் பாதுகாப்பில், பாதுகாப்பு படையினர் மிகுந்த அக்கறை செலுத்தி யுள்ளனர். உளவுப்பிரிவுப் பொலிஸா ரும் அதிக கவனம் செலுத்தி வருகி றார்கள்.

பாதுகாப்பு பணிக்காக மூவாயிரத்து 500 போக்குவரத்து பொலிஸார், 10 ஆயிரம் டில்லி பொலிஸார் செங்கோட் டையின் வெளிப்புறப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

செங்கோட்டையையொட்டி மற்றும் உட்புற பகுதியில் துணை இராணுவப் படையினர் அடுக்கடுக்காக நிறுத்தப்பட் டுள்ளனர். செங்கோட்டையைச் சுற்றி யுள்ள வீதிகள் பாதுகாப்புப் படையி னரின் வசம் கொண்டு வரப்பட்டுள்ளன. கண்காணிப்புக் கமராக்கள் அதிகளவில் நிறுவப்பட்டுள்ளன. செயற்கை நுண்ணறிவுக் கமராக்கள் 700 இடங்க ளில் பொருத்தப்பட்டுள்ளன.

டில்லி செங்கோட்டைப் பகுதி மாத்தி ரமின்றி விமான நிலையம், ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், வணிக வளாகங்கள், சந்தைகள் போன்ற மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர தினவிழாவில் பல்வேறு தரப்பினர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தெரிவு செய்யப்பட்ட ஊராட்சிப் பிரதிநிதிகள், அங்கன்வாடி ஊழியர்கள், 'ஒன் ஸ்டாப்" மைய ஊழியர்கள், குழந் தைகள் தங்களது குடும்பத்தினருடன் பங்கேற்கவுள்ளார்கள்.



## பாலின பாகுபாடற்றது

# ‘போக்சோ’

### இச்சட்டத்தில் பாலியல் குற்றம் புரிந்தவர் ஆண், பெண் என பிரித்துப் பார்க்கக்கூடாது; சுட்டிக்காட்டியது நீதிமன்றம்

இந்தியாவில் பெண்கள் மீதும் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யலாம் என்று டில்லி உயர்நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறத்தல்களில் ஈடுபடும் பட்சத்தில் பாலின பாகுபாடின்றி பெண்கள் மீதும் இந்தச் சட்டப்பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் என்று நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

‘குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட சட்டம்தான் போக்சோ. இதில் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் ஆண் அல்லது பெண் மீது பாலின பாகுபாடின்றி சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். இந்தச் சட்டத்தின் மூன்றாவது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் ‘நபர்’ என்ற வார்த்தை ஆணை மட்டும் தான் குறிக்கும் என்று ஏன் புரிந்து கொள்ளப்படுகிறது?”

‘போக்சோ சட்டத்தின் மூன்று மற்றும் ஐந்தாவது பிரிவுகளில் குறிப்பிடப்பட்டு இருப்பவை, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுவது பாலின வேறுபாடின்றி குற்றம் என்பதையே குறிக்கிறது.”

“பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் போக்சோ சட்டம் இயற்றப்பட்டது என்பதை கவனத்தில் கொண்டு– ஒரு குழந்தை மீது ஆண் அல்லது பெண் குற்றம் செய்தாலும் – நீதிமன்றம் சட்டமியற்றும் நோக்கத்தையும், சட்டத்தை இழிவுபடுத்தும் வகையில் எந்த விதியையும் விலக்கக்கூடாது.”

‘இந்த சட்டப் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாலியல் துன்புறுத்தல், குழந்தைகளை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கும் வகையில் ஏதேனும் பொருள் அல்லது உடல் உறுப்பை உள்நுழைத்தல் ஆகிய வற்றைக் குறிக்கிறது. அந்த வகையில், இது ஆணுறுப்பை மட்டுமே குறிக்கும் என்று சொல்வதில் எந்த அர்த்தமும் இருக்காது,” என்று டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி அனுப் ஜெய்ராம் பம்பானி தெரிவித்தார்.

கடந்த வாரம் விசாரணைக்கு வந்த வழக்கு ஒன்றில், பெண் ஒருவர் தன் மீது பதியப்பட்ட போக்சோ வழக்கை எதிர்த்து வாதிட்டார். இந்த வழக்கு விசாரணையின் போது தான், நீதிபதி இந்தக் கருத்தைத் தெரிவித்து போக்சோ வழக்கை எதிர்த்து மனுத்தாக்கல் செய்த பெண் மீது விசாரணை நடத்த உத்தர விட்டார். மேலும், போக்சோ வழக்கை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மனுவையும் ரத்து செய்தார்.



## பாகிஸ்தான் தேசியக் கொடி விற்ற கடை மீது

# கைக்குண்டு வீச்சு!

பாகிஸ்தானில் தேசியக்கொடியை விற்பனை செய்த கடை மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்கள் பாகிஸ்தான் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதனிடையே, பாகிஸ்தானின் 77ஆவது சுதந்திரதினம் இன்று கொண்டாடப்படுகிறது. சுதந்திர தினத்தையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுதந்திர தினத்தையொட்டி பலுசிஸ்தானின் குயூடா பகுதியில் உள்ள கடை ஒன்றில் பாகிஸ்தான் தேசியக்கொடி விற்கப்பட்டு வந்தது. அதேவேளை, பாகிஸ்தான் தேசியக் கொடியை விற்பனை செய்ய வேண்டாம் என பலுசிஸ்தான் விடுதலை இராணுவம் என்ற கிளர்ச்சிக்குழு எச்சரிக்கை விடுத்திருந்தது.

அந்த எச்சரிக்கையை மீறி தேசியக் கொடி விற்பனை செய்த கடை மீது நேற்று கைக்குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு பலுசிஸ்தான் விடுதலை இராணுவம் பொறுப்பேற்றுள்ளது.



## காசாவில் தலை வார

# சீப்பில்லை!

### முடிகளை வெட்டும் காசா சிறுமிகள்

காசா பகுதியில் இஸ்ரேல் 10 மாதங்களாகப் போரில் ஈடுபட்டு வருகின்றது. இதனால், பாலஸ்தீன மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நிவாரணப் பொருட்கள் கிடைப்பது சிக்கலாகியுள்ளது.

இந்நிலையில், காசாவில் உள்ள சிறுமிகள் தமது தலை முடிகளைச் சரிசெய்து கொள்ள வசதிகள் இல்லாமையால், தமது தலை முடிகளை வெட்டிக் கொண்டுள்ளனர்.

பொதுவாக சிறுவர்கள் முடி வெட்டிக் கொள்வது வழக்கம். ஆனால், இந்தப் பகுதியிலுள்ள சிறுமிகளும் முடிவெட்டிக் கொள்கின்றனர். காசாவில் குழந்தைகளுக்கான நோய்களைக் குணப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர் லோப்னா அல்-அஜெஜா என்பவரிடம் சிறுமிகள் பலரும், தங்களுக்கு தலை முடியை ஒழுங்குபடுத்த சீப்பு எதுவும் இல்லை என்று கூறியுள்ளனர்.


இதற்கு அவர், ‘அப்படியென்றால் முடிகளை வெட்டிக் கொள்ளுங்கள்” எனக் கூறியுள்ளார். இவர் மத்திய காசா முனையில் டெயிர் அல்-பலா பகுதியில் புலம்பெயர்ந்த பாலஸ்தீனர்களுக்கு இலவச மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறார். இஸ்ரேல் மேற்கொண்டு வரும் போரால், சீப்பு என்றில்லாமல் தலைக் குத் தேய்க்கும் ஷாம்பு, சோப்பு, வீட்டைத் தூய்மைப்படுத்தும் பொருட்கள் உள்ளிட்டவையும் கிடைப்பதில்லை.

குப்பை சேகரிப்பு மற்றும் கழிவுநீர் மேலாண்மையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், தூய்மை பற்றாக்குறை ஏற்பட்டு தொற்று நோய்கள் அதிகரித்துள்ளன. நிவாரண முகாம்களில் குளிப்பதற்கு போதிய தண்ணீர் இல்லை. இதனால், குழந்தைகள் அழுக்கடைந்து நோய் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

ரபா எல்லையின் கட்டுப்பாட்டை இஸ்ரேல் கைப்பற்றியதும், சர்வதேச நாடுகளின் உதவிகள் குறைந்துவிட்டன. இதனால், பாலஸ்தீனர்களுக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது.

# தென்னாபிரிக்க அழகியானார்

# மாற்றுத்திறனாளி!





தென்னாபிரிக்காவின் அழகியாக மாற்றுத் திறனாளிப் பெண் ஒருவர் தெரிவாகியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் 2024 ஆம் ஆண்டுக்கான அழகிப்போட்டி சமீபத்தில் நடைபெற்றது. இதில் அந்த நாட்டைச் சேர்ந்த ஏராளமான இளம்பெண்கள் கலந்துகொண்டனர்.

அவர்களுக்குப் பல்வேறு கட்டத் தகுதித்தேர்வுகள் நடைபெற்றன. இதன் முடிவில் மியா லு ரூக்ஸ் (வயது 28) என்ற பெண் தென்னாபிரிக்க அழகிப் பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், அவர் காது கேளாத மாற்றுத் திறனாளி ஆவார். அவருக்கு ஒரு வயது இருந்தபோதே காது கேட்க முடியாமல் போனது. பின்னர் 'ஹகொஹ்லியர் இம்பிளான்ட்" என்ற சிகிச்சையால்தான் ஒலிகளை உணர்கிறார். இதன்மூலம் அந்த நாட்டின் வரலாற்றில் முதன் முறையாக மாற்றுத்திறனாளி ஒருவர் அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'எனது கனவு இன்று நிஜமாகிவிட்டது. இதேபோல் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் கனவுகளை நனவாக்கவும் நான் விரும்புகிறேன். அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காகவே நான் இந்தப் போட்டியில் கலந்து கொண்டேன்" எனத் தெரிவித்தார்.

கனடா முரசு
பக்கங்கள் 07
புதன்கிழமை 14/08/2024

## பாலியல் குற்றவாளி பொலிஸாரால் கைது

கனடாவின் ரொறன்ரோவில் ஆயுதமுனையில் பாலியல் குற்றச்செயலில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இளம் நபர் ஒருவரை C2



# நவீன அடிமைத்தனத்தின் ஒரு வடிவமதான் கனடாவின் தற்காலிக தொழிலாளர் திட்டம்

## ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் காட்டமான அறிக்கை

**கனடாவின் தற்காலிக தொழிலாளர் திட்டத்தை 'நவீன அடிமைத்தனத்தின் ஒரு வடிவம்' என்று ஐக்கிய நாடுகள் சபை சாடியுள்ளது.**

**ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் டொமோயா ஒபோகாடா தனது ஆய்வின் இறுதி அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.**

கனடாவில் வெளிநாட்டு தொழிலா ளர்களை தற்காலிகமாக வேலைக்கு சேர்க்கும் திட்டம், நீண்ட காலமாக - அறுபது ஆண்டுகளுக்கு மேலாக - விவசாயத் துறையில் முதலிலிருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது, குறைந்த சம் பளத் தொழிலாளர்கள் இந்தத் திட்டத் தின் கீழ் அதிகமாகச் சேர்க்கப்படுவதால் இது புதிய விமர்சனங்களுக்கு உள்ளா கியுள்ளது.

2024-ஆம் ஆண்டின் முதல் காலாண் டில், குறைந்த சம்பளத் திட்டத்தின் கீழ் 28,730 பேரை அரசு அனுமதித்துள்ளது. இது 2023-ஆம் ஆண்டில் இருந்ததை விட 25 வீதம் அதிகமாகும்.

மேலும், இது 2016-ஆம் ஆண்டிலி ருந்து பதிவான மிக உயர்ந்த காலாண்டு எண்ணிக்கை இதுவாகும்.

இந்த திட்டத்தின் கீழ் பணியாளர்கள் தமது அடையாள ஆவணங்களை பறிமுதல் செய்யப்படுதல், குறைவான சம்பளம் வழங்குதல், உடல்தொல்லை கள், மனஅழுத்தம், அதிக வேலை நேரம் போன்ற பல்வேறு துன்பங்களை எதிர்கொள்கிறார்கள். C2


THE GLOBE AND MAIL

Canada's temporary foreign worker program a 'breeding ground' for modern slavery, UN report concludes

BILL CURRY > DEPUTY OTTAWA BUREAU CHIEF
PUBLISHED 1 HOUR AGO

A final report by UN investigator Tomoya Obokata concludes that Canada's temporary foreign worker program is a breeding ground for contemporary forms of slavery.

Prof. Obokata is the United Nations' special rapporteur on contemporary forms of slavery and a professor of international human-rights law at the the University of York in Britain.

The recently released final report cements Prof. Obokata's initial impressions, which he first expressed last year after visiting Ottawa, Moncton, Montreal, Toronto and Vancouver on a fact-finding tour.

"The special rapporteur retains the view that the temporary foreign worker program serves as a breeding ground for contemporary forms of slavery, as it institutionalizes asymmetries of power that favour employers and prevent workers from exercising their rights," states the final report, which is dated July 22 and was recently posted online.








# சஸ்கட்சுவானின் மோசோமின் நகரில் நகரில் வீடு கட்டுவோருக்கு சன்மானம்

கனடாவின் சஸ்கட்சுவான் மாகாணத்தின் மோசோமின் நகரில் வீடு கட்டுவோருக்கு சன்மானம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நகரின் சனத்தொகையை இரண்டு மடங்காக அதிகரிக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த நகரில் வீடொன்றை நிர்மாணிப்பவர்களுக்கு 30 ஆயிரம் டொலர் காசோலை வழங்கப்பட உள்ளது.

நகரின் முதல்வர் மரே கிரே இது தொடர்பில் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

வீடுகளை நிர்மாணிப்போருக்கு இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக நகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

வீடுகளை நிர்மாணிக்கும் கட்டுமான நிறுவனத்திற்கு நேரடியாக முப்பதாயிரம் டொலர் காசோலை வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நகர நிர்வாகத்தினால் இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகர மக்கள் இந்த திட்டத்திற்கு ஆதரவளிக்கின்றனர் எனவும் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சனத்தொகை அதிகரிக்கும் என அவர்கள் நம்புகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நவீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் பாலியல் தொல்லைகள், சுரண்டல் போன்ற நிகழ்வுகளைச் சந்திக்கிறார்கள் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் திறந்த வேலை அனுமதிக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம் என்றாலும், நடைமுறையில் இது பலருக்கும் சாத்தியமில்லை என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த திட்டம் ஜஸ்டின் ட்ரூடோ பிரதமரான காலத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது, மேலும் இது குறைந்த சம்பளத் தொழிலாளர்களை கொண்டு வருவதால், கனடியர்களுக்கான வருமானம் குறைவதற்கும் வேலை வாய்ப்புகள் குறைவதற்கும் காரணமாக இருந்தது என்றும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

## பாலியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நபர் பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் எனத் தெரிவிக்கப்படும் 57 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

புரொன்ட் மற்றும் பே வீதிகளுக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பாலியல் ரீதியாக துன்புறுத்தி, தாக்கியமையுடன், உடைமைகளையும் சேதப்படுத்தினார் என இந்தச் சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலிருந்து தப்பிச்சென்ற நபரை பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர்.

57 வயதான ஜோயல் டேவிட் அர்சன் யேயு என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

16 வயதிற்கும் குறைந்தவர்கள் மீது பாலியல் குற்றச்செயல் மேற்கொண்டார் என இந்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நபர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட உள்ளார். இந்த சம்பவங்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.




# கொலையுண்ட வயோதிப மாதுவின் உறவினர்களைத் தேடும் பொலிஸார்

கனடாவில் ஹமில்டனின் ஒட்டாவா வீதியில் அமைந்துள்ள தொடர் மாடி குடியிருப்பில் 77 வயதான பெண் ஒருவர் கடந்த வாரம் கொலை செய்யப்பட்டிருந்தார். அவரின் உறவினர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தப் பெண்ணை சில நாள்களாகக் காணவில்லை என அயலவர்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் அந்தப் பெண் தங்கி இருந்த வீட்டை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது அந்தப் பெண் படுக்கை அறையில் கத்திக்குத்து காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்தில் மற்றுமொருவரும் கொலையுண்டு இருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்ர நபர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பார்பரா சர்ச் என்ற 77 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

இந்த சம்பவம் ஒரு படுகொலை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உறவினர்களை கண்டறிவதற்காக பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கொலைக்காக பயன்படுத்திய கத்தியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.





# காட்டுத்தீ, புயல், காற்று குறித்து கனடிய மக்களுக்கு எச்சரிக்கை

எதிர்வரும் காலங்களில் கனடாவில் அடிக்கடி காட்டுத்தீ, புயல், காற்று போன்றன ஏற்படும் எனக் கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மனித நடத்தையினால் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக இவ்வாறு அடிக்கடி இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் சாத்தியம் உருவாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா முதல் மானிட்டோபா வரையில் இந்த மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான காட்டுத்தீ சம்பவங்கள் பதிவாகும் என இயற்கை வளங்கள் அமைச்சர் ஜொனதன் வில்கின்சன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் தற்போதைய காலத்தில் மேற்கு கனடாவில் அதிக அளவு காட்டுத்தீவு சம்பவங்கள் பதிவாவது வழமைக்கு மாறானது என அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறு எனினும் காலநிலை மாற்றம் காரணமாக இவ்வாறு அடிக்கடி காட்டுத்தீ சம்பவங்கள் பதிவாவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது சுமார் 474 காட்டு தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை சுமார் 900 ஆக காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காட்டு தீ காரணமாக பழங்குடி இன மக்கள் அதிக அளவு பாதிப்புகளைச் சந்திக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பல்வேறு வழிகளில. அவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் அவர்களது இயல்பு வாழ்க்கையில் பெரும் தாக்கம் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காட்டுத்தீ, பாரிய புயல், காற்று போன்றனவற்றிக்கு கனடியர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# நோவா ஸ்கோஷியாவில் விபத்தில் மூவர் மரணம்

நோவா ஸ்கோஷியாவில் மவுண்ட் வில்லியம் பகுதியில் பிக்டோ கவுண்டியில் கடந்த ஞாயிறு இரவு 11 மணியளவில் இரண்டு வாகனங்கள் மோதிக்கொண்ட விபத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனக் கனடிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ட்ரென்டன் மற்றும் கிரான்டன் அதிவேக (106 ஆவது இலக்க) நெடுஞ்சாலைக்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. சம்பவம் குறித்து அறிந்து கொண்ட பொலிஸார் அந்த இடத்திற்கு விரைந்துள்ளனர்.

அவ்வேளையில் இரண்டு வாகனங்களும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வாகனங்களில் ஒரு வாகனத்தின் சாரதியும் சக பயணியும், மற்றைய வாகனத்தின் சாரதியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன எனவும் விசாரணைகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து காரணமாக குறித்த அதிவேக நெடுஞ்சாலை சில மணித்தியாலங்கள் மூடப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

# குளிர்பானத்தில் நோய்க்கிருமிகள் பாதிப்புற்ற மூன்றாவது நபரும் பலி

கனடாவில் பானம் ஒன்றில் நோய்க்கிருமிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ள நிலையில், அந்த பானத்தை அருந்திய 2 பேர் உயிரிழந்தார்கள். 13 பேர் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டிருந்தார்கள்.

இந்நிலையில், அந்த பானத்தை அருந்திய மூன்றாவது நபர் உயிரிழந் துள்ளார் எனக் கனேடிய பொது சுகாதார முகவர் அமைப்புத் தெரிவித் துள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ, கியூ பெக், ஆல்பர்ட்டா மற்றும் நோவா ஸ்கொஷியா ஆகிய நான்கு மாகா ணங்களில் தாவரங்களை அடிப்ப டையாகக் கொண்ட பானம் ஒன்றில் லிஸ்டீரியா என்னும் நோய்க்கிருமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோவிலுள்ள பிக்கரிங் என்னும் நகரில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் தயாரிக் கப்பட்ட பானத்தில் இந்த கிருமித் தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கனேடிய உணவு பாதுகாப்பு முகவர் அமைப்புத் தெரிவித்துள்ளது.




Silk என்னு பிராண்ட் பெயர் கொண்ட almond milk, coconut milk, almond-coconut milk and oat milk மற்றும் Great Value பிராண்டின் almond milk ஆகிய பானங் களே பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த பானத்தை அருந்திய 2 பேர் ஏற்கனவே உயிரிழந்துள்ள நிலையில், தற்போது மூன்றவாதாக ஒரு நபர் உயிரிழந்துள்ளதாக கனேடிய பொது சுகாதார ஏஜன்சி தெரிவித்துள்ளது.




# எரிபொருளுக்கான வரிச் சலுகையை ஒன்றாரியோவில் நிரந்தரமாக்குங்கள்

## கனடிய வரி செலுத்துவோர் ஒன்றியம் கோரிக்கை

கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தில் வழங்கப்பட்டு வரும் எரிபொருளுக்கான வரி நீக்கத்தை நிரந்தரமாக்குமாறு கனடிய வரி செலுத்துவோர் ஒன்றியத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இதுவரை வழங்கப்பட்ட வரிக் குறைப்பு ஊடாக கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஒரு குடும்பம் சுமார் 900 டொலர்களைச் சேமித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஒன்றாறியோ மாகாண அரசாங்கத்தினால் எரிபொருளுக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டது. இந்த வரிச் சலுகை காரணமாக பெட்ரோல் மற்றும் டீசலின் விலைகள் குறைக்கப்பட்டன.

அதன் பின்னர் அதற்கு அடுத்த ஆண்டிலும் எரிபொருளுக்கான வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டது.

இதனால் எரிபொருள்களின் விலை ஓரளவு குறைவாக காணப்பட்டது. இந்த வரிச்சலுகையை நிரந்தரமாக வழங்க வேண்டும் என கனடிய வரி செலுத்துவோர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறு எனினும் கார்பன் வரி அதிகரிப்பு எரிபொருள் விலைகளில் தாக்கத்தைச் செலுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ரொறன்ரோவில் மது போதையில் வாகனத்துக்குள் தூங்கிய சாரதி!



கனடாவின் ரொறன்ரோவில் மது போதையில் நித்திரையில் இருந்த சாரதி ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய வாகன தரப்பிடத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த வாகன சாரதி, ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்தவாரே உறங்கிக் கொண்டிருந்தார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாகனத்தை சோதனை இட்டபோது மதுபான போத்தல்கள் திறந்த நிலையில் காணப்பட்டன எனவும் வாகன சாரதி மது போதையில் நிதானம் இழந்து இருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபரின் ஓட்டுநர் உரிமம் 90 நாள்களுக்கு இடை நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அருக்கு எதிராக பலவீனமான நிலையில் சாரத்தியம் செய்தமை உட்பட சில குற்றச்சாட்டுகள் சுமத்தி வழக்கு தொடரப்பட உள்ளது. அந்த வழக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.




# டெபி புயல் பாதிப்பிலிருந்து கியூபெக் மீள்வதற்கு நீண்ட காலம் செல்லுமாம்



கனடாவின் கியூபெக் மாகாணத்தில் இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட நகரங்கள் வழமைக்கு திரும்ப நீண்ட காலம் செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கியூபெக் மாகாணத்தின் சில நகரங்கள் டெபி புயல் காற்று காரணமாகப் பெரும் பாதிப்புகளை எதிர் நோக்கி இருந்தது.

இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட நகரங்கள் வழமைக்கு திரும்புவதற்கு இன்னும் சில மாதங்கள் தேவைப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.


மாகாணத்தின் சுமார் 14 மாநகர சபைப் பிரதேசங்களில் இயற்கை அனர்த்தம் காரணமாக அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பகுதிகளில் 175 மில்லி மீட்டர் வரையில் மழை பெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வீடுகள், கடைகள், காரியாயாலயங்கள் என்பன இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிப்புகளை எதிர்நோக்கின எனவும் பெரும் சேதங்கள் ஏற் பட்டுள என எனவும் தெரிவிக்கப்ப டுகிறது.

இந்த சீரற்ற காலநிலை காரணமாக கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த சுமார் ஐந்து லட்சம் மக்கள் மின்சார வசதியின்றி அவதியுற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.






# கனேடியப் பாடகியின் பாடல் ட்ரம்ப் தரப்பின் பிரசாரத்தில்!

உலகப்புகழ் பெற்ற கனேடிய பாடகி ஒருவரின் பாடல் ஒன்றை தனது பிரச்சாரத்தில் அனுமதியின்ற் பயன்படுத்தியுள்ளார் ட்ரம்ப் என்று குற்றம் சுமத்தப்படும் அதே வேளை வெற்றிக்குப் பொருத்தமற்ற பாடலை பயன்படுத்தியுள்ளனர் என்றும் கேலி செய்யப்படுகின்றது.

பிரபல கனேடிய பாடகியான செலின் டயான், டைட்டானிக் திரைப்படத்துக்காக பாடிய, 'My Heart Will Go On' என்னும் பாடல், ட்ரம்பின் தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பிரச்சார மேடையில் அமைக்கப்பட்டிருந்த பெரிய திரை ஒன்றில் அந்தப் பாடல் காட்சி ஒளிபரப்பப்பட்டுள்ளது.

அனுமதியின்றி செலின் டயானின் பாடல் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவரது குழுவினர் தெரிவித்துள்ள நிலையில், இதுபோல் தன் பாடலை அனுமதியின்றி பயன்படுத்துவதை அவர் ஆதரிக்கவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கிடையில், அந்தப் பாடலையா தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துவார்கள் என சமூக ஊடகங்களில் மக்கள் கேலி செய்துவருகிறார்கள்.

கடலில் மூழ்கிய ஒரு கப்பலைக் குறித்த திரைப்படப் பாடலை, தேர்தலுக்கு முன் தனது பிரசாரத்தில் பயன்படுத்தியுள்ளார்கள் ட்ரம்ப் பிரச்சாரக் குழுவினர் என சமூக ஊடகமான எக்ஸில் கேலியாக விமர்சித்துள்ளார் ஒருவர்.

# இரு துருவக் கரடிகளால் தாக்கப்பட்டு கனடா ரேடார் நிலைய அதிகாரி பலி!



கனடாவின் நுனாவுட் பகுதியில் உள்ள துருவ ரேடார் நிலையத்தின் அதிகாரி ஒருவரை இரண்டு துருவ கரடிகளால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என பி.பி.ஸி உட்பட வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெயர் குறிப்பிடப்படாத அந்த ஊழியர், கனேடிய அரசாங்கத்தின் சார்பாக ரேடார் பாதுகாப்பு தளங்களை இயக்கும் தளவாட நிறுவனமான நாசிட்டுக் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார்.

மற்றத் தொழிலாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து அந்தக் கரடிகளில் ஒன்றைக் கொன்றனர் என சம்பந்தப்பட்ட நிறுவனம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“இந்த சம்பவத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் குறித்து முழுமையான விசாரணை நடத்த உள்ளூர் அதிகாரிகள் மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களுடன் நாங்கள் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம்” என்று நிறுவனம் கூறியது.

“எங்கள் ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு எங்கள் மிக உயர்ந்த முன்னுரிமையாகும், மேலும் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்வதில் நாங்கள் ஆழ்ந்த கடமைப் பட்டுள்ளோம்.” - என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாஃபின் தீவின் தென்கிழக்கே உள்ள ப்ரெவூர்ட் தீவில் கடந்த வாரம் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

வடக்கு கனடாவில் உள்ள டசின் கணக்கான வடக்கு எச்சரிக்கை அமைப்பு அவுட்போஸ்ட்களில் இந்தத் தளமும் ஒன்றாகும்.

3,100 மைல்கள் (5,000 கிமீ) தொலைவில் உள்ள இந்த வலையமைப்பு, இப்பகுதியில் நுழையும் விமானங்கள் அல்லது ஏவுகணைகளைக் கண்டறிய அமைக்கப்பட்டுள்ளது.

மனிதர்கள் மீது துருவக் கரடிகளின் தாக்குதல்கள் மிகவும் அரிதானவை. ஆனால் இது கடந்த ஆண்டு முதல் பதிவாகும் இரண்டாவது தாக்குதல் ஆகும். கடந்த ஆண்டு, அலாஸ்காவில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு பெண்ணும் அவரது மகனும் துருவ கரடியால் தாக்கப்பட்டுள்ளனர்.

கனேடிய அரசாங்கத்தின் கூற்றுப்படி, நாட்டில் சுமார் 17,000 துருவ கரடிகள் வாழ்கின்றன, இது உலகத் துருவ கரடிகள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு ஆகும்.

இதற்கிடையில், புவி வெப்பமடைதல், கடல் பனியின் பற்றாக்குறை மற்றும் வேட்டையாடுதல் காரணமாகத் துருவ கரடிகள் எண்ணிக்கை குறைந்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.